Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 258/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 04 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.குமார் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. வேலு | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கூத்தன்வட்டம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 42 |
| எதிரிகள் ஆஜர் | | | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா. 04 திரு.குமார் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் பக்கத்து ஊர்க்காரர்கள். அனுமுத்து அவருக்கு சொந்தமான நிலத்தில் சோளப்பயிர் வைத்திருந்தார். கடந்த 2020 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை 4.00 மணியளவில் நான் அ.சா.1 ன் நிலத்தருகே சென்ற போது அவர் வைத்திருந்த பயிர்கள் சேதம் அடைத்திருந்தன. அதை பார்க்கும் போது ஒரு JCB வாகனம் சேதப்படுத்தியது போல் இருந்தது. அங்கு கூட்டமாக இருந்தது யார்யார்

இருந்தார் என்று கூறிப்பிட்டு தெரியாது. பின்பு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னையும் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அந்த நிலப்பிரச்சனை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

நீதித்துறை நடுவர் எண்.01
திருப்பத்தூர்.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 258/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 03 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.ஜோதி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. நந்தகுமார் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | காமராஜபுரம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 37 |
| எதிரிகள் ஆஜர் | | | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா. 03 திருமதி. ஜோதி முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் ஊர்க்காரர்கள். என் மைத்துனருக்கு செந்தமான நிலத்தில் சோளப்பயிர் போட்டு இருந்தார். கடந்த 21.09.2020 அன்று மாலை 4.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது அ.சா. 1 நிலத்தில் JCB வைத்து பயிர்களை சேதம் செய்வதாக கேள்விப்பட்டு உடனே நிலத்திற்கு சென்று பார்த்த போது எதிகளும் என் மைத்துனரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் செல்வதற்கு முன்பே பயிர்களை அழித்துவிட்டார்கள். பின்பு இது தொடர்பாக அ.சா.1

ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விப்பட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றாலும் சரிதான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அந்த நிலப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

நீதித்துறை நடுவர் எண்.01
திருப்பத்தூர்.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 258/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 02 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.நந்தகுமார் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோவிந்தன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | காமராஜபுரம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 48 |
| எதிரிகள் ஆஜர் | | | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா. 02 திரு. நந்தகுமார் முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் இளைய சகோதரர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் ஊர்க்காரர்கள். என் தம்பி நிலம் வாங்கி 15 –20 வருடம் ஆகிவிட்டது. நாங்கள் தான் சோளப்பயிர் வைத்திருந்தோம். கடந்த 21.09.2020 அன்று மாலை 3.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது எங்கள் நிலத்தில் JCB வைத்து பயிர்களை சேதம் செய்வதாக கேள்விப்பட்டு உடனே நிலத்திற்கு சென்று பார்த்த போது JCB வாகனம் பயிர்களை நாசம் செய்து கொண்டிருந்தது. அங்கு ஆஜர் எதிரிகள் நால்வரும் இருந்தார்கள். பின்பு எதிரிகள் நால்வரும் நிலம் தங்களுக்கு சொந்தமானது என்று என் தம்பியிடம் சண்டை போட்டார்கள். பின்பு நான் அவர்களை விலக்கிவிட்டு 1 வாரம் கழித்து புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 எதிரிகள் மீது மாண்புமிகு திருப்பத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 149/2020 வழக்கு தொடுத்து அதில் நான் சாட்சியாக இருந்தேன் என்றால் சரிதான். 2 வாரங்கள் கால தாமத்திற்கான காரணம் இல்லை என்றால் சரியல்ல. உடல்நலக்குறைவால் உடனடியாக புகார் அளிக்க முடியவில்லை. போலீசார் விசாரணையில் உடல் நலக்குறைவால் தான் புகார் அளிக்க தாமதம் ஏற்பட்டது என்று நான் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 என் சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது வழக்கு தொடுத்து பரிகாரம் கிடைக்காததால் அவர்களிடம் தொந்தரவு செய்ய வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்யாக இவ்வழக்கு அ.சா. 1 தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சென்ற போது அங்கு JCB வாகனம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சம்பவம் முடிந்த பின்பு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

நீதித்துறை நடுவர் எண்.01
திருப்பத்தூர்.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 258/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 01 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அனுமுத்து | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கோவிந்தன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | காமராஜபுரம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 42 |
| எதிரிகள் ஆஜர் | | | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா. 01 திரு. அனுமுத்து முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து கொண்டு மளிகைகடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் . அவர்கள் என் ஊர்க்காரர்கள். கடந்த 2020 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. மாலை 04.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்து 1/2 கி.மீ தொலைவில் உள்ள என் நிலத்திற்கு சென்ற போது நான் ஏற்கனவே வைத்திருந்த சோளப்பயிர்களை JCB வைத்து நால்வரும் அழித்துவிட்டனர். பின்பு உடனே நான் ஜோலார்பேட்டை காவல் நிலையம் சென்று இரண்டு வாரங்கள் கழித்து புகார் அளித்தேன். நான் அழித்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்காததால் நான் என் வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் ( **அந்த புகார் அ.சா.ஆ.01 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் எதிரிகள் மீது மாண்புமிகு திருப்பத்தூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 149/2020 வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது சுவாதினத்தில் உள்ள நிலத்தில் எதிரிகள் தொந்தரவு செய்ய கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 21.09.2020 அன்று எதிரிகள் என் சோளப்பயிர்களை நாசம் செய்து விட்டதாக நான் தொிவித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு ஆனது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் நான் மேல்முறையீடு தொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் தீர்ப்புரை தான் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை என்றால் சரிதான். **( அந்த தீர்ப்புரை கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** அந்த தீர்ப்புரையில் 14ம் பக்கத்தில் 11ம் பத்தியில் சோளப்பயிர்களை நாசம் செய்யததாக நான் நிருபிக்கும் வகையில் சாட்சிய சான்றாவனங்களை முன்னிலை படுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 2 வாரங்கள் கால தாமதத்திற்கான காரணத்தை நான் புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது வழக்கு தொடுத்துவிட்டு அவர்களிடம் தொந்தரவு செய்ய வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 21.09.2020 அன்று சம்பவம் நடந்ததாகவும் அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் அளித்ததுமாக புகாரில் தெரிவித்திருந்தால் தவறு என்றால் சரிதான். சம்பவம் மாலை 4.00 மணிக்கு நடந்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்தேன் என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் காலை 10.00 மணிக்கு நிலைய மனு எண் வழங்கியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் என்னை மிரட்டிய நபர்கள் மிரட்டியதாக மிகைப்படுத்தி கூறியதாக போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் போலீசார் விசாரணையில் வாக்குமூலத்தில் என்னை மிரட்டிய நபர்கள் என்னை மிரட்டி அடித்து விட்டதாக மிகைப்படுத்தி கூறிவிட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு நான் கூறவில்லை.

போலீசார் விசாரணைக்கும் முதல் விசாரணைக்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. யார் JCB வாகனத்தை வைத்து சேதப்படுத்தினார்கள் என்று புகாரிலும், முதல் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் JCB வாகனத்தை வைத்து சேதப்படுத்திருந்தால் அந்த வாகனத்தின் ஓட்டுநரை விசாரித்து இருப்பார்கள் என்றாலும், எனவே நான் கூறுவது போல் சம்பவம் நடைப்பெறவில்லை என்றாலும் சரியல்ல. உரிமையியல் நீதிமன்றத்தை நாடிவிட்டு கெட்ட எண்ணத்துடன் எதிரிகள் மீது பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

**//உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

நீதித்துறை நடுவர் எண்.01
திருப்பத்தூர்.